**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 2630/2016**

Deposition of the witness for Prosecution **PW** 7
Name : **வனிதா**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (22.06.2026)

Accused present

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.11.2015 ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான் செங்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது. சிறப்பு உதவி ஆய்வாளர் இருளப்பன் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண். 273/2015, பிரிவுகள் 279, 337 இதச வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் இரவு 7 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான செங்கோட்டை பாரஸ்ட் செக் போஸ்ட் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் இசக்கிமுத்து, குருசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

பின்னர் சாட்சிகள் கணேசன், அருணாச்சலம், முருகன், மழையால், முருகையா,இசக்கிமுத்து, குருசாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் விபத்தில் சம்பந்தப்பட்ட TN H 3811 பயணிகள்

ஆட்டோவையும் TN 41 AA 6568 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் விபத்து ஆய்வு செய்ய வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜசேகர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்றேன். அந்த TN H 3811 பயணிகள் ஆட்டோவிற்கு மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். அந்த TN 41 AA 6568 இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். நிலையத்தில் ஆஜரான எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையத்தில் விடுவித்தேன்.

பின்னர் காயம்பட்ட அருணாச்சலம் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இந்துமதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேற்றுடன் காயச்சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும். முருகன் என்பவரது காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆகும். கணேசன் என்பவரது காயச்சான்று **அ.சா.ஆ.10** ஆகும். மல்லிகா என்பவரது காயச்சான்று **அ.சா.ஆ.11** ஆகும். முருகையா என்பவரது காயச்சான்று **அ.சா.ஆ. 12** ஆகும். எதிரி பொன்பாண்டி என்பவரது காயச்சான்று **அ.சா.ஆ.13** ஆகும். அருணாச்சலம் என்பவருக்கு மேல்சிகிச்சை வழங்கிய மருத்துவர் மணிகண்டன் என்பவரை விசாரித்து சிகிச்சை விவரம் சான்று பெற்றேன். அருணாச்சலம் என்பவரது சிகிச்சை விபர சான்று **அ.சா.ஆ.14** ஆகும். எதிரி பொன்பாண்டிக்கு மேல்சிகிச்சை அளித்த திருநெல்வேலி அரசு மருத்துவர் அருண் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிகிச்சை விவரம் சான்று பெற்றேன். அந்த சிகிச்சை விவர சான்று **அ.சா.ஆ.15** ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த இருளப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் அருணாச்சலத்திற்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்ட பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து சட்ட பிரிவுகள் 279, 337, 338, இதச படி சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.16** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 279, 337, 338, இதச மற்றும் பிரிவு 146 உ/இ 196, 3 உ/இ 181 MV Act படி குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்தேன். அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.15 வரையான ஆவணங்கள் பிரிவு 294 Cr.P.C படி குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கில் புகார் கொடுத்த அ.சா.1–க்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கொடுத்தாரா இல்லை புகார் மனு எழுதிக் கொடுத்தாரா என்றால் புகார் மனு எழுதி கொடுத்தார். தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். அப்போது அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டுதான் இருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் விசாரணையில் புகார்தாரர் ஆட்டோவும், எதிரி இருசக்கர வாகனத்திலும் வந்ததாகத்தான் துலங்கும் என்றால் சரிதான். புகார் மனுவில் அ.சா.1 ஓட்டி வந்த ஆட்டோவில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிக்கும், அவருக்கு பின்புறம் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து வந்த இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் சம்பவம் பாரஸ்ட் செக்போஸ்ட் அருகே நடந்ததாகத்தான் விசாரணையில் துலங்கும் என்றால் சரிதான். பாரஸ்ட் செக்போஸ்டில் இருந்து செங்கோட்டையை நோக்கி வரவேண்டும் என்றால் வடக்கில் இருந்து தெற்கு பக்கமாக தான் வரவேண்டும் என்றால் சரியல்ல தென்கிழக்கா வர வேண்டும். பாரஸ்ட் செக் போஸ்டில் இருந்து செங்கோட்டைக்கு வர்றதாக இருந்தால் வடக்கிலிருந்து தெற்கு பார்த்துதான் வரவேண்டும் என்றால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்காக வந்ததாக நான் சொல்லி இருப்பது பொய் என்றால் சரியல்ல. கிழக்கிலிருந்து மேற்காக சென்று இருந்தால் அது செங்கோட்டைக்கு வரக்கூடிய திசை இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் காயம் பட்ட எதிரியை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி எதுவும் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

அன்று நடந்த விபத்திற்கு எதிரி காரணமில்லை என்றாலும் எதிரி சாலை விதிகளை பின்பற்றி மெதுவாகத்தான் வண்டியை ஓட்டி வந்தார் என்றும், புகார்தாரர் அளவுக்கு அதிகமான ஆட்டோவில் ஆட்களை வைத்து ஓட்டி வந்து வடக்கில் இருந்து

தெற்கு நோக்கி போவதற்கு பதிலாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி போனதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக வடக்கே போகக்கூடிய ரோடு செங்கோட்டை ரயில் நிலையத்திற்கு போகக்கூடிய ரோடு என்றால் சரிதான். அ.சா.1 அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஆட்டோவை ஓட்டி வந்து எதிரி இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. காயம்பட்ட எதிரி செங்கோட்டை அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று அதன் பின்பு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மூன்று மாதகாலமாக சிகிச்சையில் இருந்தார் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். அந்த சிகிச்சைக்கு பின்னர் எதிரி நிரந்தர ஊனமுற்றவர் என்று சான்று வழங்கிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஒரு பொய்யான புகாரினை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார்கள் அதன் பெயரில் நான் ஒருதலைப்பட்சமாக விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரி முதல் சிகிச்சை செங்கோட்டை மருத்துவமனையில் பெற்று மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி சென்ற காரணத்தினால் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட எதிரி என்னிடம் புகார் மனுவோ, வாக்குமூலமோ கொடுக்க முடியாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிர்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. விபத்து முழுக்க முழுக்க அ.சா.1 கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.22 14:45:02 +0530

Judicial Magistrate, Shenkottai